(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 87 of 2019 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.5** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : சண்முகவேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of October 2022.

14.10.2022

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1 முதல் 3 எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்

இல்லை. எங்கள் வீட்டின் அருகில் உள்ள முள்ளை யாரோ வெட்டிபோட்டுவிட்டு மலம்கழித்து சென்றுள்ளார்கள். அப்போது, காலை 08.00 மணியளவில் நானும், எனது மகள் துரைச்செல்வியும் வீட்டில் பேசிக்கொண்டு இருந்தபோது ஆஜர் 1 முதல் 3 எதிரிகளும் அவர்களுடன் 3 பெண்களும் வீட்டிற்குள் வந்து என் மகளை பார்த்து தேவிடியா ஏன்டி சிரிக்கிற என்று கம்பால் ஆஜர் மூன்று எதிரிகளும் அடித்தார்கள். எனது மனைவியின் சேலையை உறுவிஅடித்து விட்டார்கள்.

**2)** நான் ஏன் அடிக்கிறீர்கள் என்று தடுத்த போது என்னையும் ஆஜர் 3 எதிரிகளும் அடித்தார்கள். என் மகளுக்கு இடுப்பில் காயமும், எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எனது மகளை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். காவல்நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1)** முதல் விசாரணையில் கூறிய விபரங்களைத் தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன். வழக்கு யார் கொடுத்தார்கள் என்றால் எனது வீட்டில் இருப்பவர்கள் கொடுத்தார்கள். நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் நான் மதுரையில் மட்டுமே 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன்.

**2)** என்னை நுண்கதிர் புகைப்படம் எடுத்தார்கள் அதை நான் வீட்டில் வைத்துள்ளேன். மொத்தம் எத்தனை நபர்கள் வீட்டில் வந்து அடித்தார்கள் என்றால் 6 நபர்கள் வீட்டிற்குள் வந்து அடித்தார்கள். என்னை எத்தனை பெண் நபர்கள் அடித்தார்கள் என்றால் என்னை

அடித்தது 3 ஆண் நபர்கள், 1 பெண் சும்மா நின்றுகொண்டிருந்தார்.

**3)** ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் தான். எங்களுக்குள் இடப்பிரச்சனை உள்ளதா என்றால் ஆமாம். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னமாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**4)** காயம்பட்ட துணிகளை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் வழக்கிற்காக 6 நபர்கள் என்னை தாக்கினார்கள் என்று மிகைப்படுத்திக் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.